

# படைப்பு

சமுகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு -6

(01 / 12 / 2016)

நகரத்துச்சாலையோரச்
சுவரில் வரைந்திருக்கும் நதி
பஞ்சர் கடைக்குளிருந்து ஆரம்பித்து
பூக்காரியின் முதுகுக்கு பின்னால் முடிகிறது.
வதங்கும் பூக்களில் நீர் தெளிக்கும்
அப்பெண்ணை பேருந்து சன்னலிலிருந்து
பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

நகரம் தவளையின்
நாக்கைப்போல
விடுமுறை முடிந்ததும் எல்லோரையும்
உள்ளிழுத்துக்கொண்டிருக்கிறது.

--- நிலாகண்ணன்

வெட்டப்பட்டு
விறகுக் கடையில் கிடந்த
அந்த
அகண்ட
அடி மரத் துண்டில்
செதுக்கப்பட்டிருந்த
பெயர்களில்...
ஒன்று
கீழ் சாதிப் பையனதும்
ஒன்று
மேல் சாதிப் பெண்ணினதுமாய்...
இருக்குமோ என்னவோ!

--- துருவன் பாலா

இன்றைக்கு
தயிர் சாதமும்
மோர் மிளகாயும் ..
நாளைக்கு
தக்காளி சாதம்..
அடுத்த நாள்
இட்லியும் மிளகாய்ப் பொடியும்..
அப்புறம் எலுமிச்சை சாதம்
தேங்காய் சாதம் ..சாம்பார் சாதம்
என்று வாரத்தில் ஆறு நாட்களை
பள்ளிக்கு செல்லும் போது
ஆழ அமுக்கி கேரியரில்
அன்பை குழைத்து
அனுப்பி வைத்த அம்மாவுக்கு
போதுமென்று விட்டு வைத்த
மிச்ச சாதமே
மொத்த உணவு
என்றாகிவிடும் பல நாட்களில் ..
என்ற உண்மை தெரிந்த போது
அம்மா அம்மாவாக இல்லை
தெய்வமாகி இருந்தாள்!

--- கருணாநிதி ஷண்முகம்

ஆற்று நீருக்கு எப்போதும்
அழுக்கு வண்ணமே தீட்டுகிறாள்
சலவைத் தொழிலாளியின் மகள்...

--- சந்துரு

பதறிய
மனங்கள்
பாடையேறிய
நியாயங்கள்...

தகன
மேடையில்
தவிக்கும்
கட்டிடம்...

வெடித்துச்
சிதறிய
ஜெலட்டின்...

தரையில்
விழுந்து
மயங்கிய
மனங்கள்...

நிமிடத்தில்
காணாமல்
போனது
நம்பிக்கைகள்...
முகலிவாக்கம்

--- சகா (சலீம் கான்)

சாண்வயிறுக்காய்
முழம் நீளும் கைகளில்
பசிரேகைகள்!

--- மகி சுவிஸ்

ஒழுகும் கூரையின் கீழ் வைத்த
அலுமினியப் பாத்திரத்தில் சொட்டும்
மழைத் துளியின் சப்தம்போல்
ஓயாமல் எழுந்துகொண்டிருக்கிறது உன் நினைவு !

சற்றே குடிக்கவிட்டு பால்வரும் நேரத்தில்
இழுத்துக் கட்டிய
கன்றுக்குட்டியைப் போல
உன்னை நோக்கி
தீரா தாகத்துடன்
தாவிக்கொண்டேயிருக்கிறது
மனசு !

வெட்டுப்பட்டு விழக்காத்திருக்கும் மரத்தின்
முறிந்துவிழும் முனகலைப் போல
கேட்கிறதென் இதயத்தின் ஓசை !

பற்றியெரியும் காட்டில்
தாயில்லாக் கூட்டில்
பறக்க இயலாமல் தவிக்கும்
குஞ்சுகளின் எதிர்காலத்தைப் போல
நகர்கிறதென் வாழ்க்கை !

--- இளமாறன்

அலைக்கும் கரைக்குமான ஊடலில்
பிறந்து உடைகின்றன
நீர் குமிழ்கள்

--- பாரதி

எனது கனவுகளை
பொதி மூட்டையில்
சுமக்கும் கழுதை நான்

சில நேரங்களில்
பஞ்சு மூட்டையாய்...
சில நேரங்களில்
உப்பு மூட்டையாய்...

இரண்டு
மூட்டையையும்
ஒவ்வொரு முறையாய்
சுமந்து வாழ்க்கை
கடலை கடக்க முற்படுகிறேன்...

பஞ்சு மூட்டை கனத்தவண்ணமும்
உப்பு மூட்டை கரைந்த வண்ணமும்
அழுக்கு போகாத கழுதையின்
வெளுத்த கனவாய் கிடக்கிறது...

ஆற்றங்கரையின்
சுத்த வாசலில் நிற்கும்
அக் ககழுதையின் எண்ணக்கூட்டில்
இன்னும் ஓர் எண்ணமிருக்கலாம்
என்னை பார் யோகம் வருமென்று...

அதிர்ஷ்டத்தை பாரதா
கழுதை வெளுக்க வெளுக்க
துவைத்த ஆடைகளை சுமந்தே
கழுதையின் தோலும், கனவும்
மக்கியே கிழிய தொடங்குகிறது...

கழுதை குரலில்
பாடவும்
கற்பூர வாசனை காணவும்
கோவில் குளத்தடியில்
முங்கி சாதகம் செய்கிறேன்

வெளுத்து துவைக்கும்
ஆடைகளை போல
வெளுத்துகட்டுகிறேன்

யாருக்கும் புரியவில்லை
கழுதையின் சரிகமபதநி
சங்கீத ஒலி...

--- ஸ்டெல்லா தமிழரசி

என் மகள்
பள்ளி முடிந்து
வீடு திரும்பும் முன்
குருவி
கூடு திரும்பி விடுகிறது.

இரையென
ஓட்ஸ் விதைகளைத் தான்
விழுங்கி வருகிறார்கள் இருவரும்....

--- பி.கே.சாமி.

வற்றிய ஆற்றின்
கரையில் தீராநதி
விதவையின் வீடு!

--- தகூஷன்

மொழியின்
ஆழ்விளிம்பில்

இருண்மையின்
பரிபூரணத்தில்

நிசப்தங்களின்
தியானத்தில்

பிரபஞ்ச
சிறு புள்ளியில்

காணாக் கிடக்கும்
கவிதையின்
பெருபிராணனை

சிறு ஆத்மா
சென்றடைந்து விடுமா
இப்பிறவியிலேயே.....?

--- சட்டாம்பிள்ளை

இரவல் வெளிச்சம்
------------------

ஒளிமிகு பொருட்கள் எல்லாம்
ஒளியுடை பொருட்கள் அல்ல;
இருளுக்கும் ஒளியிங்கு உண்டு
இகமதே ஒளிநிறை உடைத்தாய் !

மதிமுக ஒளியிங்கு காட்டின்,
மலர்மிகு மனமது காட்டும்;
கடுமுகம் ஒளியின் நிழலாய்க்
காட்டுதல் ஒளிப் பிழையன்று !

நிலவின் ஒளியது கூட
நிறையொளி அதனதன் அல்ல;
ஒளியினை இரவல் வாங்கி,
ஒளிர்தலும் அதன் குறையல்ல !

தரணிசூழ் பேரண்ட வெளியில்
தனதொளி கொண்டதன் மதிப்பு
ஒளிசூழ் உலக வெளியில்
ஒப்புமை இல்லா தாகும் !

இயற்கைக்கு மட்டும் இங்கே
இவ்விதம் பொருத்தம் அல்ல;
இயற்கையில் மனிதனும் ஒன்றாய்
இருளது நீக்கும் ஒளியாய் !

சுயஒளி கொண்ட மாந்தர்
சூட்சுமதாரி இவ் வாழ்வில்;
இரவலாய்ப் பிறர்ஒளி வாங்கின்
இழப்புகள் தன்னொளி ஆகும் !

எவ்வொளி உன்னுள் ஒளியோ
அவ்வொளி கொண்டே ஏற்று;
இரவலாய்ப் பிறவொளி வேண்டாம்
உனதொளி உனை ஒளியாக்கும் !

--- கே. கமலசரஸ்வதி

பசியில் அழும் குழந்தை
சபித்து கொண்டிருக்கிறாள் அவள்
"அந்த மூன்று நாட்களை"

--- மணி_அமரன்

சல்லிவேர்த் தொகுப்பு
------------------------

திட்டுத் திட்டாய் தேங்கி
நிற்கும் நினைவுகள் கொண்டு
வளர்க்கப்பட்ட புல்லின்
சல்லிவேர் எங்கும்
மூளையில் முகாந்திரம்
செய்து இதயத்தின்
மையத்தில் ஆலமரத்தின்
ஆணிவேரை மரமாக்குகிறது !

எவரோ ஒருவருக்கான விடியலில்
எவனோ ஒருவனின் கனவுகள்
எல்லாம் கருவறுக்கப்பட்டன !

இருளுக்கும் வெளிச்சத்திற்கும்
இடையில் தடைகளும்
நிழல்களும் சதுரங்கம்
ஆடுகிறது ! பிணைக் கைதியாய்
ஒரு மூலையில் நான் !

புத்தகத்தின் ஓரத்தில் மடிக்கப்பட்டு
கிழிந்து போன பக்கமாய்
ஒரு ஒற்றைக் காதல் !

சலன வீதிகளில் ஒரே ஒரு
மௌனக் குரல் மட்டும்
யாருக்கும் கேட்காது
என்று தைரியத்தில் மிகவும்
சத்தமாக புலம்புகிறது !

வெளியில் சொல்லாத
காதலும் வெளிப்படுத்திய
கோபங்களும் சிலந்திவலையில்
சிக்கிக்கொண்ட உணவுத்துண்டமென
மனிதனை மாற்றுகிறது!

தனிமனித தேவைகள் எல்லாம்
தடம் புரளும்போது சுயமும்
ஒழுக்கமும் காரணமேயின்றி
கேள்விக் குறியாக்கப்படுகின்றன!

ஏன் என்ற கேள்விக்கும்
எதற்கான என்ற தேடல்களுக்கும்
இடையில் பொய் முகம்
கொண்ட நவீன மனிதம்
வளர்க்கப்படுகிறது
வரையறை ஏதும் இன்றி !

கால்கள் அடியை முன்னே
எடுத்துவைத்தாலும்
கடிகாரம் முன்னோக்கி
நகர்ந்தாலும் நாட்கள்
எல்லாம் நாளை
இன்று நேற்று என்றே
பின்புறம் ஓடுகிறது !

மனித வீதிகளில் நடப்பவை
அனைத்தும் மாயைகளாக
தோன்றுகின்றன ! உண்மை
யாதெனில் நான் அழும்போதும்
கண்ணீர் உப்பாய்த் தான்
கரிக்கிறது !

--- மகிழினி.பா

உன்னால் தீட்டப்படும்
ஒவ்வொரு இரவுக்கும்
நமக்கான வர்ணங்களிடுகிறாய்
நிலவிலிருந்து கற்பனைக்கோடாய்
ஒரு நதியொன்றையும்தான்...
அதனருகில் நிறைய நிறைய
மரங்களின் பிம்பங்கள்
மர அசைவுளின் வழியே நிலவை
பார்ப்பதைப்போல் இருக்கிறது
நட்சத்திரங்களை அள்ளி நதியில் வீசுகிறாய்
வெள்ளிப்பூக்காடாக கிடக்கிறது நதி,
நதிக்கரையின் பரிசலில் நம்மிருவரின்
நிழல்களை அசைக்கிறது காற்று
ஆரஞ்சி நிற பட்டாம்பூச்சிகளாய்
பறக்கிறது கரையோர மரங்களின் இலைகள்,
அவைகள் யாவும் வானம் நோக்கி
வீசப்படுவதைப்போலுள்ளது...
எஞ்சியுள்ள நட்சத்திரங்களை பொடியாக்கி

சற்று மேலுழெந்து கீறியிருக்கிற
எறும்பு புற்றில் சர்க்கரையென தூவுகிறாய்
அக்காட்சியில் லயித்துயிருக்கிற என் மூக்கினுள்
எறும்பு படைகள் புகுந்து
மூளைவரை செல்கிறது
மனதுக்குள் மெல்லமாய் சிரித்திடத்தோன்றும்முன்
என்னிமைகளை நீவி
என்னிதழ்களில் நீண்ட நேரம்
ஏதோ ஓதுகிறாய்
என் வானம் அகலமாகிறது
எந்நாசி தீப்பிழம்புகளை உமிழ்கிறது

உன் எனும் பெருஞ்சிறகுகளை
எடுத்து உடுத்திக்கொள்கிறேன்
என்னை எப்படியும் மீட்டெடுத்துவிடு
உம்மால் வரைந்த
இந்த கற்பனை இரவிலிருந்து...

--- வினோத்

பரந்த இருட்டைப் போல
கறுப்பாய் இருந்தது என் தேசம்....

அந் நெடிய இரவில்
பயணித்த வாகனம் ஒன்றின்
இயந்திரப் பழுது
எண்ணெய்க் கக்கலாகவும்
இருக்கலாம் அக்கறுப்பு...

வியர்வைப் பிசுக்குஊறி
மண்பிசிறல் கலந்த
சாக்குகளின் அடிப்பிடித்தமாகவும்
இருக்கலாம் அக்கறுப்பு...

கத்தரிக்காய் முதல்
கனகாம்பரப் பூச்சரங்கள் வரை
தெருவெங்கும்
திளைத்துப் பரவிக்கிடக்கலாம்
அக்கறுப்பு....

அதனாலென்ன...வெள்ளையடிக்கத்தான்
தொடங்கி விட்டார்களே.....
அதுசரி... வெள்ளையடிப்பு
என்பதை
கறுப்பைக் கொல்லுதல் என்றும்
அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்தானே....??

--- கட்டாரி தமிழ்

சாயங்காலம் சீக்கிரம்
விடிந்து போகையில்
வானம் கொண்டாடும்
மழைநீரில் ஊறிய காதல்
எனக்குள் உறைந்து கிடக்கிறது

ஈர வடிதலோடு
மணலுடலில் ஏங்கி ஏங்கியே
கரைந்து போகும் கடல்

வெண்நீல வானில்
என்னென்னவோ நிலாத்துளிகள்
நேற்று இருந்திருக்கலாம்
இசைக்கருவிகள்
சூழவும் மூச்சு

குழப்பமான
முத்தங்கள்
எண்ணி எண்ணி
மெல்ல எச்சிலாகிறது

நீ நீயாகவே
தொலைந்திருக்கிறாய்
நான் மட்டும் வெற்றிடமாக.....

ஒரு இரங்கல் நாளினைப்போல
காடுகளின் ஓரத்து
மயானங்களில்
கலந்திருக்கும் பாடல்
அதில் அவ்வளவு
மரணமில்லை

ஒரு படுக்கை
ஒரு கூரை
சில வெளிச்சத்துளிகள்
கொஞ்சம் கனவு

எல்லாமே ரட்சிப்புக்கள்
தான்

அரைகுறைக் கொலைபோல
அதுவே விடுதலை
அதுவே தண்டனை

பனிப்பொழிவு சூடாக
இருந்தாலும்
நான் உயிருடன்
இருக்க எதையேனும்
பருக வேண்டியிருக்கிறது

--- நசீஹா மொய்தீன்

பெட்டிக்குள்
முடங்கி
மூச்சடங்கிப்
போன கறுப்பு
சட்டைகள்
காய்கின்றன
கொடிகளில்..
காலை விடிவதற்குள்
வெளுத்துவிடுவோம்
என்ற நம்பிக்கையுடன்.

--- மீயாழ்

## மயில் குட்டிக்குக் கோழிக் குட்டி
------------------------------

நடுப்பக்கத்தில் பீலியொன்றுடன்
நான்கு அரிசிகள் போட்டு
நேற்று மூடி வைத்ததை
இன்று காலையில்
பிறித்துப் பார்க்கிறாள்...

ஆசையில் கண்கள் விரிய
குட்டி போட்டுவிட்டது மயில்
என்று உற்சாகத்தோடே....
உதிர்ந்த ஒரு சிறகை
எடுத்துக் கொண்டு ஓடுகிறாள்...

வீட்டுப் புறத்தில் கூடொன்றில்
அடைகாத்துக் கொக்கரித்த கோழியிடம்
கண்கள் சுருங்கக்
கெஞ்சும் தொனியில்...

"நான் மயில் குட்டி தருவேன்
நீ கோழிக் குட்டி தருவியா ..."

--- மீ.மணிகண்டன்

## நீயில்லாத இரவு
-----------------

என்னையும்
எந்தன் இருப்பையும்
பருகிச் செரித்த களைப்பில்
உறங்குகிறதிந்த இரவு.
வழக்கத்தை விட நீளமாய்
இருக்கிறதிது...
நிலவுக்கென்ன
இரவுடன் கைகோர்த்தபடி
ஒளிவழி உறிஞ்சுகிறதென் உயிரை.
ஒரு பாதுகாப்பற்ற தோட்டமாய்
உணர்கிறது இந்த இரவில்
உழன்று துடிக்குமென் மனது.
எந்நேரமும் எந்தவொரு
அரவத்தாலும் தாக்கப்படக்கூடுமது.
பாளம்பாளமாய்
உன் நினைவுகளை
உள்மனதிலிருந்து
வெட்டியெடுத்து வீடெங்கும்
இறைக்கிறது
இந்த இரக்கமற்ற இரவு.
தூர்த்துக் கொண்டிருக்கிறது
இந்த ஒய்யார மது போத்தல்.
ஆண்டாண்டு காலமாகத்
தான் சேகரித்த போதையை
கிண்ணத்தின் வழி
புத்திக்குக் கடத்தியபடி.
நீயில்லாத இந்த இரவு
என்னையும்
எந்தன் இருப்பையும்
பருகிச் செரித்த களைப்பில்
உறங்குகிறது
என்னை மட்டும் உறங்கவிடாமல்.

--- சுரேஷ் பரதன்

## விடியலைப் பயிரிட
----------------------

ஒருநாள்
பூமி உருண்டையின்
கிழக்கு விளிம்பில்
ஒரு சித்திரக்காரன் வந்தான்
ஒரு புதிய சரித்திர மாற்றத்துக்கான
சித்திரங்கள் கொண்டுவந்தான்

அவர்கள் கேட்டனர்:
அழகான வர்ணங்கள்
இவை என்ன விலை ?

சித்திரக்காரன் சொன்னான்:
இவை விற்பனைக்கல்ல
விதைக்கவே.!
சித்திரங்களைப் பார்த்துச்
செல்லுங்கள்
சரித்திரங்களாகப் பூத்துச்
செல்லுங்கள் ..!

மீண்டும் ஒருநாள்
பூமி உருண்டையின்
கிழக்கு விளிம்பில்
ஒரு விடியலின் பாடகன் வந்தான்
சில வைகறைப் பாடல்கள்
கொண்டு வந்தான் .

அவர்கள் கேட்டனர் :
அழகான பாடல்கள்
இவை என்ன விலை ?

பாடகன் சொன்னான்:
இவை விற்பனைக்கல்ல
வைகறையை
அறிமுகம் செய்யவே ..!
பாடல்களைக்
கிழித்துச் செல்லுங்கள்
வைகறையை மட்டும்
எடுத்துச் செல்லுங்கள்

--- கவித்தாசபாபதி

## புறாக்களுக்கோர் தூது
--------------------------

உயரக் கலசங்களில்
அமர்ந்து கொண்டு
கலகங்களை கட்டவிழ்த்து
விடுவதிலேயே
குறியாக இருக்கின்றன
கிராதகப் பருந்துகள்

கோயில் புறாக்களே....!
சிறகுகளை விற்றேனும்
கொஞ்சம் இடம் மாறுங்கள்

பிறக்கும் இடத்தை வைத்து
மதச்சாயம் பூசுவோரிடமிருந்து
பொரிக்கும் குஞ்சுகளாவது
நிம்மதியாய் வாழட்டும்

--- க.அர.இராசேந்திரன்.

இருண்டு கிடக்கிற
இந்த
நீளிரவின்
வீதியெங்கும்
இறைந்து
கிடக்கின்றன
எழுதப்போகுமென்
கவிதைக்கான
வார்த்தைகள்
ஒளிர்ந்தும்
உயிர்த்தும்!

--- வளவன் கரிகாலன்

விதிமுறையில்லா விளையாட்டு!
---------------------------------------

தூரம்!
அறிவிக்கப்பட மாட்டாது!
ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்!

நேரம்!
தெரிவிக்கப்பட மாட்டாது!
முடியும்வரை ஓட வேண்டும்!

இலக்கு!
நாமாகவே நிர்ணயித்துக் கொள்ளலாம்!

பங்கேற்கத் தகுதி!
பங்கேற்பதே தகுதி!

மைதானம்!
ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு வடிவத்தில்!
ஆனால், அனைத்திலும்
மேடுபள்ளம் நிறைந்திருப்பது திண்ணம்!

நடுவர்!
அவரவர் விருப்பப்படி
தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்!

பரிசு!
நிச்சயப் பரிசு ஒன்றுண்டு!
நிச்சயமாய் அதைப் பரிசில்லை
என்பார் பலர்!

பார்வையாளர்கள்!
சகப் போட்டியாளர்களே!

வந்தோர் அனைவரும்
போட்டியில் பங்கேற்றே ஆக வேண்டும்!
வேறு வழியில்லை!
வந்த வழி செல்வதும் சாத்தியமில்லை!

எப்படியோ! முட்டி மோதி
வெற்றிக் கனியைப் பறித்தாலும்
ருசிக்க முடியாது!

வெற்றிப் பெறும் கணம்!
வெற்றுக்கூடாம் நீ, நான் பிணம்!

வித்தியாசமான விளையாட்டு!
விதியோ கடவுளோ இயற்கையோ
விளையாடும் வாழ்க்கைதான் இந்த
விதிமுறையில்லா விளையாட்டு!

--- முகில் வேந்தன்

ஆழத்தின் அந்தரங்கம்
அவசியமற்றதாயினும்
நுரை தள்ள ஓடி வந்து
இரகசியங்களைக் கொட்டித்தீர்த்து
அபிப்பிராயம் கேட்டு மீளும் அலையை
புறம்தள்ளிப்போனதில்லை கரை
கிளிஞ்சல்களைப்பரிசமாக்கி இரைச்சலுடன்
உரசல்களை அடமானமாக்கி
தனதங்கத்தை கொள்ளை கொண்டு போகும்
அலை மீண்டு வரத்தாமதாமன
போதும் பாய் விரித்துக் காத்திருக்கும் கரை

இடம்மாறிப்போவதில்லை

ஆழத்தூங்கும் நீர் கிளரப்படுவதென்னவோ
காற்றினாலானபோதும் மேனி புடைத்து உச்சம்
தீர்க்க நாடுவதென்றும் கறையற்ற
காதலுடன் காத்திருக்கும் கரையைத்தானே

சாகரத்தின் தாளாத்தழுவலில்
கணிப்பீட்டில் நிறுத்திவிட முடியா
எண்ணற்ற மணற்துணிக்கைகளின்
அலட்டலில்லா நடனக்காட்சி
சூன்யப்பார்வைகளுக்கென்றும் அரங்கேற்றமாவதில்லை

--- திருமலை ஷகி

வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
-------------------------------------

இரவு நேரங்களில் ஒரு குழந்தையின்
அழுகை போன்றதொரு ஓலத்தைத் தவிர்த்து
பூனையிடம் குறையென்றேதுமில்லை.
மூன்று வேளைகளிலும் மனைவி
தவறாது வைக்கும் பாலினைக் குடித்துவிட்டு
காய்ப்பேறிய வயல்களில் பறவை விரட்டும்
சோளக்கொல்லைப் பொம்மை போலத்தான்
இதற்கும் எலிகளோடு கண்ணாமூச்சு..
எதையும் விரட்டியதாக இல்லை.
வயிறைக் காயப்போட்டா தானா
எலியைப் புடிக்குமென அப்பா சொன்னதிலிருந்து
பசியால் வீட்டுக்குள் அதன் நடமாட்டம் அதிகமானது.
அதன்பிறகான வீட்டின் நிகழ்வுகள் அனைத்திலும்
வீட்டுக்குள்ளும் முற்றத்திலும் குறுக்கும் நெடுக்குமாக
அதன் நகர்வுகள் யாருக்கும் உறுத்தவேயில்லை.
ஒரு நிகழ்வொன்றுக்கு வெளியூர் புறப்பட்ட அப்பா
தெருமுனையிலிருந்தே திரும்பிவிட்டார்
ஏனென்று கேட்டபோது
"பூனை குறுக்கே வந்திருச்சி…
இருந்துட்டுப் போறேன்" என்றார்.
சற்றுமுன் எலி பிடித்த களைப்பிலிருந்த
வீட்டுப்பூனை அவர் மடியேறிப் படுத்துக்கொண்டது.

--- ஆண்டன் பெனி

பெருங்காற்றாய் வந்து
மலர்ந்து கிடக்கும்
என் உணர்வுகளை – நீ
உதிர்த்து விட்டு செல்லும் போதெல்லாம்
இனிமையானத் தருணங்களைப்
பொறுக்கி எடுக்கமுடியாமல் தவிக்கிறேன்...

ஆசை சிறகு விரித்து
உன் அருகில் வாஞ்சையோடு
வந்தமரும் போதெல்லாம்
என் இறகு பிய்த்து
இம்சை செய்கிறாய்...

பூவின் மீது வந்தமரும் பட்டாம்பூச்சியாய்
மென்மையைப் பழகிக் கொண்ட பிறகு
எனது பெண்மையை உடைக்காத
உனது பேரன்பில் திளைத்து
மையத்தில் சேமித்து வைத்திருக்கும் தேனை
நானே உனக்கு ஊட்டிவிடுகிறேன்...

நகக் கீறல் இன்றி
நகரும் இரவுகளில்
மறுபடியும் பூக்கத்தான் செய்கிறது
மணம் பரப்பி உன்னை மயக்கும் ஆசை
இன்னும் ஒருமுறை...

--- ப.குணா

இருவானம்
-----------

அதிகாலை மஞ்சள் மலரில்
விழிக்கும் விழிகளிலிருந்து வெளியேறுகிறது
நாளைய தேவைக்காக
இன்றே திட்டமிடும்
புத்துணர்ச்சியுடனான உணர்வுகள்...

முதலிரவில் களைந்து கிடக்கும் அழகை
வெளிச்சமிடும் வானத்தை விடவும்
அதிசயம் வேறொன்றுமில்லை
உள்ளழகை விடப் பேரழகு கொண்டது
இருளைத் துவைத்துப் பிழியும் வெளியழகு...

அடர்ந்த மௌனம்
உனக்குள்ளும் எனக்குள்ளும்
உதிப்பதற்கு முன்பாகவே
அலைகளில் விழுந்து
காற்றில் பரவிக்கொண்டது

படிக்கட்டில் இறங்கிவரும் நீருக்கு
எதிர்த்திசையில் ஏறிவருகிறது
கரையோரப் பாறையில்
நீரின் உயர்மட்டம்

இரண்டும் ஒன்றோடொன்று
கலந்து திரும்பும்போது
கனவிலிருந்து எழுந்த குழந்தை
கூடுகளை அசைத்தன...

நீரிலாடும் நிழலை மிதிக்காமல்
வெள்ளி நதி ஜதியிசையில்
கிழக்கில் குளிப்பதை ரசித்தபடியே
மேற்கில் மதி மயங்கிக் கொண்டிருந்தாள்...

--- திருமு

நெடுங்கோடையின் நடுநிசியில்
காற்றில் துளிர்ந்திருந்த பிசுபிசுப்பினை
அனிச்சமாய் துடைத்தபடியே
சுழலும் கண்களும் கைகளுமாய்
காற்றில் நடன அசைவுகளை பாவிக்கிறான்
மனம்பிறழ்ந்த ஒருவன்

அவனுக்கு பிடித்தமான
இருண்ட வானத்தை
பிட்டு பிட்டு உண்ணுகையில்
அவன் கால்களை பின்னுகின்றன
தகிக்கும் நிலத்தின் சர்ப்ப நாவுகள்

விக்கும் தொண்டை தாகம் தீர்க்க
நினைவுகளில் மிச்சமிருக்கும்
பால்ய மழை ஞாபகங்களை
தன் அழுக்கு கைகளால்
அள்ளி அள்ளி பருகுகிறான்

சட்டென அவன் நெஞ்சின் மேல் விழுந்த
ஒற்றை மழைத்துளியால்
தன்னை ஒரு போதும் கைவிடாதிருந்த
அம்மாவின் மடி வேண்டி
ஒரு குழந்தையாய் போல
நிலத்தில் புரண்டு புரண்டு
அழுகிறான்

எந்த காலத்தின் சொற்களாலும்
ஆற்றுப்படுத்தவே முடியாத அழுகையல்லவா அது

இரவை உண்டு புசிப்பவன் அவன்
இரவை புணர்ந்து சுகிப்பவன் அவன்
இரவை ஒரு துளியாக்கி
உருவமில்லா இரவினை
கோள வடிவமாக்கியவன் அவன்
இரவை மேலும் இருளாக்குபவன்
அவனன்றி வேறுயார்தான்?

கள்வர்களின் காலடி
ஓசைகளின் பின்னே
எறும்பாய் பின்தொடர்ந்து
பிறகு கள்வர்களின்
சிவப்பு ஒளியான பீடி நெருப்பாகி
இரவின் வேறொரு கண்ணாய் ஒளிர்பவனின்
கைகளிலும் இதயத்திலும்
கள்ளப்பொருள் ஏதுமில்லை

இரவின் கிளைகளில் ஒழுகும்
சுகித்தலின் பிசினை
ஒரு சுவீங்கமாக்கி உண்ணும்
அவன் கண்களின் நீர்மையில்
நீந்திக்கொண்டிருக்கின்றன
அம்மணமான
மீன்குஞ்சுகளும்
தலைபிரட்டைகளும்

மொத்த வானத்தின் இருளையும்
தின்று செரித்த
அவன் விரல்களின் வழியே
உதிர்ந்த மஞ்சள் மலராய்
காற்றில் மிதந்து போகிறது
அவன் மனபிறழ்விற்கு காரணமான
பௌர்ணமி நிலவு

--- அன்பில்பிரியன்

அவன் இவ்வுலகத்தினனல்லன்
------------------------------

முழுமையாக ஐநூறு ரூபாய்த்தாளை
பார்த்தறியாத கண்கள் அவனுடையது

உங்களின் தினசரி செய்தித்தாள்
அவனுக்கு
வடைமடிக்கும் ஒன்று

ட்ரம்பிலிருந்து ஒபாமா வரை
நீங்கள் வறுத்தெடுப்பதை
அறிந்திடவே இயலாத
செம்மண்ணுப் புழுதிவாசி அவன்

இருவேளைப் பழைய சோறு
போதும்
அன்றைய வாழ்வை
வாழ்ந்துமுடித்திருப்பான்

கைக்கு வாகாக
ஆடுவிரட்ட கழி கிடைத்ததென்றால்
சகல செளபாக்கியமும்
பெற்றவனாய் பெருமிதம் கொள்வான்

வெகு லாவகமாக ஆட்டிற்கு பிரசவம் பார்த்துவிடுகிறான்

ஆட்டின் ரோம வாசனையும்
புழுக்கை வாசனையும்
போதுமானதாய் உணர்பவன்

வங்கியின் முன் நீண்ட வரிசை என்பதெல்லாம்
அவனுக்கு புரியாத ஏதோ ஒன்று

எளிமையாய்ச் சொல்லிவிடுகிறீர்கள்
அவனுக்கென்ன தெரியும் என்று

நாம் பிழைத்துக் கொண்டிருக்கும் இதே தேசத்தில்தான்
அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்

பீடியைப் பற்ற வைத்து
இழுத்துக் கொண்டு
ஆட்டின் முதுகு வருடுபவன்
அவன்
நம் தேசத்தவன்தான்

ஆனால்
நம் உலகத்தினனல்லன்.

--- *யாத்ரீகன்*

சிறுவயது
புகைப்படங்களை
எடுத்துப் பார்க்கிறேன்..
என்னை
தூக்கிப் பிடித்து
சிரித்து நிற்கிறார்
அப்பா..
கைகளை அகல நீட்டி
அவரது தோளில்
அமர்ந்து..
நான்
சிரித்திருக்கிறேன்..
கைகளுக்குள்
அகப்பட்டிருந்தது
நிலவு..!

--- *இரா.கவிமலை*

வலி
-----

அழகிய
கவிதையை படித்துக்கொண்டிருக்கிறேன்

மாதவிடாய் நாட்களில் முதல்
மூன்று நாட்களின்
வலியை போல்
அல்லது
இன்னும் கொஞ்சம் அதிகமாய்
பிரசவ நேரத்தின் பெண்ணுடலின் அதி உச்ச
வலியை உணர்த்துகிறது.

ஆம்
அழகு ஆபத்தாம் இப்போது தான்
புரிகிறது
அன்றொரு நாள் அழகாய்
இருந்து அழிந்து போன
என் காதலின்
கரு தான் இந்த கவிதைக்குள்ளும் .

--- கயல்விழி

கரைதல் சுகம்
-----------------

வானம் மின்னிக்கொண்டிருக்கிறது
மழை வரலாம்
வராமலும் போகலாம்

நேற்று எண்ணத்துவங்கி
பாதியில் விட்ட நட்சத்திரங்கள்
இன்று கொள்ளை போயிருக்கின்றன

என் அறையில் சேகரித்து வைத்திருந்த
உனக்கான இனிப்புப் பழங்கள்
புளிப்பேறிக்கிடக்கின்றன

விளக்குகள் அணைந்து அணைந்து
என் வலிகளைக்
கேலிசெய்து கொண்டிருக்கின்றன

பறத்தலுக்காய் காத்திருந்த
என் பட்டாம்பூச்சி இறக்கையை
உன் சொற்கள் கூர்பார்த்துவிட்டன

நகக் கணுக்களில் கீறிக் கீறிப் பீறிட்டெழும்
என் குருதிச் சரித்திரத்தில் இப்போது
நீயிருப்பதாகத் தெரியவில்லை

இந்தக் கானகத் தேசத்தில்
கீறிச்செழித்து வளரும்
மூங்கில் புற்களின் நடுவே பூத்த
இறுதி ரோசா நானாக இருக்கட்டும்

முழு நிலவுக் கவிதையிலிருந்து
தேய்பிறையெனக் கரைதலும்
சுகமாய்த்தான் இருக்கிறது..

--- பிறைநிலா

ஆண்கள் தின வாழ்த்து
----------------------------

என்னை முயற்சிக்க விடாமல்
ஒவ்வொரு முறையும்
குறைந்தபட்சம் ஒரு தோசையை
பிய்த்துத்தான் தருகிறாய்

எழுதிக் கொடுத்த பொருளில் சிலவை
இரண்டு முறையிருந்து இரண்டாகி வீடு வர
லிஸ்டைக் காட்டி சிவந்தமுக கரிசனங்களோடு
உச்சுக் கொட்டுகிறாய்

சில நாட்களுக்கு இடையை
நாட்களை மடக்கி வைத்து விட்டு
அத்தனை முறையும் புதிதாகவே டைரி
எழுதத் தொடங்குகிறாய்

என் லீவிஸ் டெனிம் லீ ரக ஜீன்ஸ்களை
உன் தேர்ந்தெடுத்தலுக்குப் பின்னும்
வீடு கொண்டு சேர்க்க
போதும் போதும் என்றாக்குகிறாய்

ரோஜாக்களை பறிக்கும் போது
பாவமெனத் தலை திருப்பிக் கொள்கிறாய்.

குழம்புக்கு உப்பினை
எனை பார்க்கச் சொல்கிறாய்.

ஒரு சண்டையுமில்லாது முடியப் போகும்
வெறுமை சேர்ந்த நாளை நீ
சும்மா விடுவதேயில்லை.

என்றைக்கோவிற்கான ஒன்றுக்கு
இன்றிலிருந்து என ஆரம்பிக்கும்
ஒவ்வொரு முறையிலும் உன் முகம்
பாதியில் விட்டஅப்பழைய கணக்கென
அழகாய் விழிக்கிறது.

சிறு கெஞ்சலுக்காக
முகம் தூக்கிய நாளில்
பாத்திரங்களில் பாவம் கழுவச் செய்கிறாய்

வேண்டாமென்று சொல்லியும் ஒரு
டைல்ஸை விட்டு வெளியேறாமல்
ஐந்து புள்ளி ஐந்து வரிசைக்கு மிகாமல்
கோலம் எனும் அதை போட்டேத் தீர்கிறாய்

இதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள
முடியாத நான்
சிரித்து விடுகிறேன்
உன் திருவாய் மலர்ந்து நீ
ஆண்கள் தின வாழ்த்துக்களைச்
சொல்லி முடிக்கையில்.........

--- முருகன்.சுந்தரபாண்டியன்

ம(வ)ரங்கள்
----------------

எல்லோரும் வந்தமர்ந்து
இளைப்பாறிப் போகிறார்கள்...
நின்று கொண்டே
வெயிலில் காய்கின்றன
நிழல் தரும் மரங்கள்..!

--- ஆ.மகராஜன்

தென்னந்தோப்புக்குள்
தலை கவிழ
நிலம் பார்த்து ஓடியவள்
வேகமாய் பாய்ந்தாள்
கிணற்றுள்.

நான் நன்றாக கவனித்தேன்
அவள் கோழியல்ல மனிதி தான்
அவள்
நிறைமாத கற்பினியும் அல்ல
ஒல்லியான உடல்வாகு உடையவள்தான்.

பிறகு எப்படி
கிணற்றில் குதித்து
சில முட்டைகள் இட்டுக்கொண்டிருக்கிறாள்.

பிரவித்து வருபவளிடம்
இவ் வினாக்களை வீச
மிகுந்த ஆவலாய் காத்திருந்தேன்.

மெல்ல மேலெழும்பி
நீரில் மிதந்தாள்.

இப்போது
இன்னும் கூடுதலான வியப்புடன்
உற்றுப் பார்க்கிறேன்
மிகப்பெரிய முட்டையை
சுமந்தவளாய் இருக்கிறாள்
எத்தனை உப்பியிருக்கிறது பாருங்கள்
அவளின் வயிறு.

--- நெகிழன்

தீக்குளித்த ஒற்றை தீக்குச்சியின்
ஒரேயொரு தணலை
தனக்கென்று பறித்துக் கொண்ட
லாந்தர் விளக்கின் வெளிச்சம்
ஒற்றை தீக்குச்சி உமிழ்ந்த
வெளிச்சமில்லை

நீள்வட்ட கண்ணாடிக் குடுவையினுள்
நிரம்பி வழிகிற இவ்வொளி
ஒரு மின்மினி பூச்சை ஏளனம்
செய்கிறது
ஒரு விட்டில் பூச்சியை மரணிக்க
செய்கிறது
ஒரு எறும்புக்கு தீனித் தேட வழி
செய்கிறது

என் அறைக்குள் பாதியளவே
இருளை விழுங்குகிறது
மீதமொரு இருளை என்முகத்தில்
அப்பிச் சிரிக்கிறது
ஒரு போர்வைக்குள் போர்த்தி
அப்பிய இருளின் முகத்தில்
மஞ்சள் தொய்க்க முயற்சிக்கையில்
மண்ணெண்ணெய்
தீர்ந்த தாகத்தால்
விளக்கு விம்மி விம்மி
விழி இழந்த நிறத்துக்குள்
கும்மிருட்டானது.

--- இவன் தங்கா

குழந்தையின்_கிறுக்கல்
-----------------------------

நிலா இருக்கிறது
சூரியனும் இருக்கிறது
மேகம் இருக்கிறது
மரங்கள் இருக்கிறது
காக்கைகள் பறக்கிறது
ஒற்றையடி பாதை இருக்கிறது
மழையும் பெய்கிறது
சிறிய குடிசையின்
கதவு திறந்தே இருக்கிறது
நீரோடை இருக்கிறது
மிதிவண்டியில் ஒருவன்
நடைபாதையில் மனிதர்கள்...
என
உன்னால்
கிறுக்கலாக
படைத்திட்ட ஓவியத்தில்தான்
இவ்வுலகை காண்கிறான்

--- ராம் பெரியசாமி

முன்பள்ளி செல்லும்
ஒரு குழந்தை
முகாமின் எல்லை வேலியின்
தொய்ந்திருந்த கம்பியை
பற்களால் இழுத்து
பலப்பரீட்சை
நடத்தினாள்
போல தெரிந்தது.

வேலிக் கம்பியை
கன்னத்தில் வேய்ந்து
கன்னக் குழிகளைச் செதுக்கி
இன்பத்தை நிரந்தரமாக்கிக்கொள்ள
முளைக்கும் அவள் அகதி.

குருதியை ஓட்டியாவது
இன்பம் வெல்லவேண்டுமென்பது
அவள் ஆதங்கம்.

சுதந்திர வலயத்திற்குள்
அவள் கனவுகளைச்
சுருக்கிக்கொள்ள
பயிற்சி எடுக்கிறாள்.

ஒவ்வொரு நாளும்
அதே இடத்தில் தான்
அவள்
கோடி ஆசைகளை
குத்திக் கிழிக்கின்றாள்.

அவளைக் கடந்து போகும்
ஒவ்வொரு வாகனங்களிலும்
அவள் நினைவுகள்
சவாரி செய்கின்றன.

அவளை
மீட்டுச் செல்ல முனையும்
அவள் பெற்றோர்
புதைகுழியைத் தோண்டுவதை
பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

--- நிஸ்பான்_ஹம்ஸா

## அன்பீனும் சிறு துகள்

----------------------

பரபரப்பான தார்சாலையை
பகலில் கடக்க முயலும்
சிற்றெறும்பு போல்
பதற்றமானதென் வாழ்வு.

வாகனத்தின் சக்கரத்தால்
பாதிவுடல் நைந்தபடி
அசைவற்றுகிடக்கும்
மரவட்டைப்போல்
சலனமற்றுக் கிடக்கிறேன்
நெடுந்துயரத்தால்.

மஞ்சள் பூக்கள்
உதிர்ந்துகிடக்கும்
சாலையொன்றில்தான்
என்வாழ்வு
மறுபடி மறுபடி உயிர்க்கின்றது.

அம்மாவின்
கரம்பற்றியபடி நடைமேடையில்
குதித்து விளையாடி
பள்ளிச் செல்லும் சிறுமியொருத்தி
வாழவேண்டியதன்
அவசியத்தைக் கற்பித்துவிடுகிறாள் எனக்கு.

ஆனாலும்
அதீத போதையில்
பெற்ற மகளையே
தந்தையொருவன்
காமுகனோடு
வன்புணர்ந்தானெனும்
நாளிதழ் செய்திக் கண்டபின்...

காமுக வர்க்கத்தின்
நரம்புகளை அறுத்து
குறிகளைத் துண்டாக்கும்
திராணியற்ற இவ்வுலகை...

ஓரிரவில் வேரோடு பிய்த்து
பிரபஞ்சப் பெருவெளியில்
துகள்களாய்த் துண்டிட்டு
அன்பீனும் சிறு துகளாய்
மாற்றியமைக்காது
மனதளவில் மரித்து
இறந்த என் உடல் வளர்த்து
என்செய்வேன் நான்.

--- குமரேசன்_கிருஷ்ணன்.

கூட்டம் வருமிடத்தில்
கூவி விற்கும்
மீன்கார அம்மாக்களும்
பூக்கார அம்மாக்களும்
கூட்டமிருந்தும்
கூவாமலிருக்கிறார்கள்
விற்காமல் நிற்கிறார்கள்
கடன் தரமாட்டேனென
கடிந்த வங்கியின்
வாசலில்.

--- வினோத்குமார்_பா

அன்றாடம்
------------

பாவி மனுஷா?
நல்லா இருப்பியா நீ?
கூந்தல் பிடித்து எட்டி உதைபட்டு
மூலையில் விழுந்த அம்மாவின் புலம்பல்..
தெறித்து விழுந்த
நெகிழிப் பையிலிருந்து
அரிசி, பச்சைமிளகாய்
இத்யாதி பொருட்கள் சிதற...
தரையில் கிடக்கும்
நாலுமாத தங்கச்சிப் பாப்பாவின் அழுகை;

லுங்கியை மடித்துக் கட்டி
காலி டப்பாக்களை திறந்து
விசிறியடிக்கும் அப்பா..
எப்படியும்
சாமி படத்துக்குப் பின்னால்
அம்மா வைத்திருக்கும்
காசை கண்டு பிடித்து
மீண்டும் ஒரு உதை கொடுத்து
வெளியே செல்லப் போகிறார்..

போனவுடன்
குரைத்துக் கொண்டிருக்கும்
சுப்பிரமணி நாய்குட்டி
முந்துவதற்கு முன்னமே
அம்மா கொண்டுவந்த
பையிலிருந்து எகிறி
மண்தரையில் கிடக்கும்
பொட்டலத்திலிருந்து
எட்டிப் பார்க்கும்
அந்த இரண்டு வடைகளை
ஓடிப்போய் எடுத்துக் கொள்ளவேண்டும்..
அப்பாவின் காலடிபட்டு நசுங்காவிட்டால்..

கண்ணில் நீர்தழும்ப
பார்த்து கொண்டிருந்தான்
சின்ன ராசு..

--- ஜி ராஜன்

நிர்வாணத்தின்
மேலூறும் கண்களுக்கு
ஆடையை பற்றிய
அக்கறையே இல்லை..!

பகலை கலைத்து
இரவை உடுத்திக் கொள்ளும்
இவ்வானத்தின் நிர்வாணம்
எப்போதுமே புலப்பட்டதில்லை
என் கண்களுக்கு..!

மீனவர் கைது!
கொதித்துக் கொண்டிருக்கிறது
குழம்பில் மீன்.!

மீன் விற்ற காசு
மணக்கிறது
என் வீட்டு சமையலறையில்.!

--- சா.அருண் பிரபாகரன்

மீனாகப் பார்க்கிறேன்
மனித அழுக்குகளை உண்டு
நீங்களோ என்னைத்
தக்கைக் கண்கொண்டு
பார்க்கிறீர்கள்

காற்றுக்கும்
நட்பாய் இருக்கிறேன் நான்.
நீங்களோ என்னைக்
குடுவைக்குள் குடிவைக்கத்
துடிக்கிறீர்கள்.

என்னுள் பிரதிக்கும்
ஆன்மாவே நீ
என்கிறேன்.
ஓ, அழகு தேன்மாவைத்தான்
உன் ஆன்மா அழைக்குதோ
என்கிறீர்கள்.

எல்லோரும் வாழட்டும்
வா வாழ்த்தவென
அழைக்கிறேன் நான்.
மனசுக்குள் கந்தகமென
மொத்தமாய் நின்று
முன்மொழிகிறீர்கள்.

எதுவுமே வேண்டாமென
அமைதி  மட்டும் காக்கிறேன்.
மூளைச்சரக்கு முடிந்து போய்
முடங்கியதே மூலதனமென
பந்தர் பகிர்கிறீர்கள்.

நன்னயம் செய்கிறேன்
இன்னல் செய்தார்க்கும் என்கிறேன்.

போடா, வள்ளுவர் கூட
பிழைக்கத் தெரியாதவரென
பிணக்குக் கொள்கிறீர்கள்.

இதென்ன உலகு
இதென்ன வாழ்க்கை
பிணக்குரல் ஒலிப்பே
உங்களின் வேட்கை.

அசைவற்றசைவற்றனுபூதி பெற
உலகத்தின் இசைவு
நமக்கினி எதற்கு?
உள்ளுக்குள்ளே
ஓர் ஒளி உண்டு
அதனில் நனைய
உன்னுயிர் நடத்து.

--- சுதந்திரன்

சில நேரம் மௌனங்கள்
கடத்திச் செல்கிறது
நமக்கான ப்ரியத்தையும்
தூரத்தையும் பல நேரம்
ஒரு சொல் நிர்ணயிக்கிறது
அது கொலைவாளா
உறைவாளாயென
கொல்லத் துணிந்த பின்
கருணை பார்ப்பதில்லை
கத்திகள்

--- (z) ஜபீர்

உயிரின் விலை
------------------

அவன்தான் எனக்கு
அத்துணையும் கற்றுக் கொடுத்திருந்தான்
தூண்டில் தேர்விலிருந்து
வீசும் நுட்பம் உட்பட..
அவ்வப்போது தூண்டில்முள் கட்டும் முறைகளையும்
பலியாகும் இரைகள் கோர்ப்பது வரை...
எங்கெங்கு மீன்கள் துள்ளுமெனவும்
தூண்டில் எவ்வாறு வீச வேண்டுமெனவும்
அவன் அழகாக
கற்றுக் கொடுத்திருந்தான்
சிறுமீனுக்கேற்ற உணவு முதல்
பெரும்மீன்களுக்கேற்ற உணவு வரை
அவன் அகராதி அத்துப்படி

பல சமயங்களில்
அவனுடன் அமர்ந்து மீன்பிடிப்பினும்
என் தூண்டிலில்
எந்த மீனும் சிக்கியதில்லை
தூண்டிலுடும்போது பேசக்கூடாது
மீன்கள் கேட்டு ஓடிவிடும் என்பான்
அதனாலேயே
தும்மலையும் துளியாகவே விடுவதுண்டு
தள்ளி அமர்ந்தே
அவன் தூண்டில் வீசுவதால்
நுட்பம்பல அறியாமலே போனதுண்டு நான்

அனைத்தையும் கற்றுக் கொடுத்திருந்தான்
அவன்... ஓர் உயிரின் விலையைத் தவிர!

--- முனியாண்டி_ராஜ்

பெருவெளியின் சப்தங்களில்
மௌனம் இறந்து கிடக்கிறது ,
காற்றின் திசையறியாமல்
பறந்து செல்லும் சருகுகளின்
அந்திமம் ,
வீழும் இடத்தில்தான் விதிக்கப் பட்டதாம்,
புத்தனின் மௌனத்திலும்
சில ஏக்கங்களும், சில சப்தங்களும்
புதைந்து இருந்திருக்கும் ,
மரணமென்பது, ஒன்றும் நிசப்தமில்லை
சில ஏக்கங்களின் தூக்கம்,
ஒன்றை விழுங்கி, ஒன்றில் வாழும்
பரிணாமத்தின் பரிதவிப்பு ,
ஆசையின் பெரு உண்டியலில்தான்
அகப்பட்டுக் கிடக்கின்றன
மனிதச் சில்லறைகள் ,
காற்றின் திசையறியாமல்தான்
நாமும் பறக்கின்றோம்
வீழும் இடத்தில் நமக்கும் கூட
விதிக்கப் பட்டிருக்கலாம்
அந்திமத்தின் அடங்காத அந்தகாரம் !
மௌனம் மௌனித்தே யிருப்பதில்லை,
சப்தங்களின் மொத்தத்தையும்
சுமந்துதான் வாழ்கிறது !
நம்மைப் போலவே......

--- முகமதுபாட்சா

மீசை
நரை
மயிர்
நாசூக்காய்
பறி;

தலைக்கு
கருஞ்சாயம்
தடவு ;

கண்ணாடி
தவிர்த்து
கண்
குவியமிடு;

தொந்தி
கரைய
காலையில் ஓடு ;

இளசுகளிடம்
இச்சையோடிரு;

மகன் உடுப்பு
உடுத்து ;

அனிருத்துக்கும்
ஆடி பார் ;

முக நூலில்
மகன்
மகள்
மறை ;

இத்தனையும்
செய்து வா ;

நீ
"அங்கிள்"
ஆகிபோன
அவலத்தில்
உனக்கே
உடன்பாடு
உண்டாகதபோது...

--- கோ.ஸ்ரீதரன்

இரு இனத்தின் முடிவு
கோடாரியோடு நிற்பவனுக்கும்
மரத்துக்கும் இடைப்பட்ட
ஒற்றைப் புள்ளியில் துவக்கம்

--- இருத்ரன் ரிஷி

எல்லா உடுக்கைச் சத்தத்திலும்
பயம் வந்த எனக்கு

செல்வி அக்காவின் காதலை
பேயென்று ஓட்டி அடித்த
அந்த உடுக்கைச் சத்தத்தில்

எப்போதும் மிடுக்காக
வலம் வரும்
எதிர்வீட்டு சரவணா அண்ணா
உடைந்து அழுதபோது
உதடுகள் துடிக்கும் அழுகை
எனக்கும் வந்தது

--- அகதா

இந்தியன்
வெள்ளைக்காரனாகிறான்
------------------------------

குறிஞ்சியெனும்
குறியீட்டினில் பையப் பைய
ஏறுகிறது கறுஞ்சர்ப்பம்
கூட்டுக் குடும்பமாய்
விதவித பாக்கெட்டுகளை
கட்டுச்சோறு கட்டிக்கொண்டு
உருளைத் தடியூணி
ஏற எத்தனிக்கின்ற
பேருந்தில் மழலையொன்று
புன்னகையுடன்
பாப்கார்னையும்
படையலாக்கி செல்கிறது
பூரிப்பில் பாக்கெட்டை தன்வசப்படுத்திய
வானரத்தின் மௌனம்
உச்சரிக்கிறது
"இதென்னடாது புதுசா இருக்கு"
புராதனத்தை வாயில் சொருகி
இருப்பிடத்தைச் சேர்ந்தவர்கள்
வெள்ளைக்காரனை விரட்டியடித்தோமென
மெச்சுவதில் தற்கேவலம்
உதிக்கிறது
அவன் ஊட்டி
வளர்த்துச் சென்ற
பூங்காவின்மூலமாய்;
சட்டை செய்யாது
போவோர் வருவோரையும்
உணர்வற்ற வாகனப்
பயணிகளையும் திரும்பிப்
பார்க்க வைத்த மலைகளின்
இளவரசி கொண்டையூசி
குத்திக் கொண்டிருக்க
பறந்து வந்த நெகிழிப்
பாடை அங்கங்கு
கிடக்க அதனுள்
மறைந்திருந்தது
நாளை பிணமாகும்
மலையின் உடல்

--- சே தண்டபாணி தென்றல்

அடிக்கடி குறுந்தகவல்கள் அனுப்பிக் கொண்டிருந்த
ஒரு தோழியைக் காணவில்லை
அடிக்கடி அக்கறையுடன் உபதேசித்துக் கொண்டிருந்த
ஒரு ஆசானைக் காணவில்லை
அடிக்கடி குறியீட்டுடன் காலை மாலை
வந்தனம் செய்துகொண்டிருந்த
ஒரு கவிஞனைக் காணவில்லை

நேசித்த கணத்தின் நேசம்
இன்னும் தொலைந்து விடவில்லை என்றுதான்
நம்பித் தொலைக்கிறோம்

--- நிஷாமன்சூர்

சருகுகளை உதிர்ப்பதில்லை.
பயன்படுத்திக் கொள்ள அழைக்கிறது.
வாழைமரம்.

--- கோவிந்தராஜன் பாலு

பணம் என்னடா பணம்!
------------------------

எல்லோருக்கும்
தேவைப்படுகிறது
பல நேரங்களில் பணம்
சில நேரங்களில் மானம்.

உடல் விற்ற பணத்தில்
உடைகள் வாங்கப்படுகின்றன.
கடவுளைப் பார்க்க
பணம் கொடுத்துவிட்டு,
வேண்டுதலின் பெயரில்
திருப்பி கேட்கப்படுகின்றன.

யாரோ ஒருவரால்
சம்பாதிக்கப்படும் பணம்,
யாரோ ஒருவரால்
திருடிச் செல்லப்படுகிறது.
பணத்துக்காக கொலை செய்ய
பணம் தேவைப்படுகிறது.

வயிற்றில் அடித்து
சம்பாதித்தவன்,
வயிறு பசித்த இன்னொருவனுக்கு
தர மறுக்கிறான்,
அவனை எல்லாரும்
'பிழைக்கத் தெரிந்தவன்' என்கிறார்கள்.

மனிதனோ, கடவுளோ
யாராக இருந்தாலும்
பிணம் எரிக்க
பணம் கேட்கப்படும்,
பிணவாசம் உணர்ந்தால்
பணவாசம் அற்றுவிடும்.

அரசன் சுவைத்த பணம்
அடிமையின் நாக்கிற்கு
எட்டுவதில்லை,
அதிகம் சேர்த்த பணம்
அன்பின் வழிக்கு
வருவதில்லை.

--- மனோ ரெட்

உன் நிறம்
------------

எலும்பு ரத்தம் சதை
உன்னைத் தூக்கிவிடும்
தன்னம்பிக்கை

கை கால் கண்
நகர்வுக்கான
நண்பர்கள்

நரம்பு மூச்சு இதயம்
இருப்பதற்கான
சாட்சிகள்

உடல் உயிர் வியர்வை
உன் உயர்வின்
வரலாறு

பயிற்சி
முயற்சி
நீ

--- கா.இலட்சுமணன்

கரையும்
காகத்திற்கு
சோறு வைத்து விட்டு
பிள்ளைகளை
பள்ளிக்கு
அனுப்பி விட்டு
ஏதோ
சிலநேரங்களுக்காக
என்னோடு வேண்டுமென்றே
செல்லமாய் சண்டை போடும்
அவள்
என் அன்பிற்குரிய
என் அன்பின் பைத்தியக்காரி

--- செல்வராஜ் கார்த்திகேயன்

நான்தான் கடவுள் என்று
முறைப்படி
அறிவிக்கவில்லை நான்.
நீங்களாகவே
கண்டுபிடிக்கட்டுமென்று
கத்திருந்தேன்.
நீங்களோ
வேறு எதையோ
கடவுளென்று கூத்தாடி
என்னைப் போட்டுடைத்தீர்கள்.
உங்களைச் சந்திக்காமலேயே செத்த
சாமானியனாகி விட்டேன் நான்!

--- குறிஞ்சி நாடன்

அகம்
------

கால்களைக் குறுக்கி மடக்கி
ஓரமாய் சுருண்டு கொள்கிறேன்
கொஞ்சமாய் குளிர்கிறது
இல்லையில்லை இன்னும்
வெப்பம் வேண்டுவதாய்
இருக்கிறது உடலிற்கு
வழிந்தோடும் கண்ணீர்த் துளிகளுக்கு
என்ன பதில் சொல்வதென்று
தெரியவில்லை
பதில் சொல்லாமலிருப்பதில்
அர்த்தம் ஏதும் இருப்பதாய்
தோன்றாமலில்லை
சூடான நீர் கன்னம் வழிகிறது
கொஞ்சம் இதம் சேர்க்கிறது
வலியோடு விரல் கோர்க்கிறது
விசும்பல்கள்
கதறி அழ துடித்திடும் மனது
அழுதால் பலவீனம் என்கிறது
நொடிகள் தொலைந்த நாட்களில்
மேலிருந்து மெல்லக் கீழிறங்கும்
இருள் கவ்விக் கொள்கிறது விழிகளை
இன்னும் கொஞ்சம் உடல் குறுக்கி
வெப்பம் சேர்க்கிறேன்
கனவுகளே இல்லாத தூக்கத்தின் முடிவில் இன்னும்
நான் நானாகவே இருக்கிறேன்..

--- கார்த்திகா அ

எதிலுமே
பிடிப்பில்லாத ரோஸிக்கு
அந்த அறையை
மிகவும் பிடித்திருந்தது

எப்போதும் அதனுடன்
மௌனமாகவோ சப்தமாகவோ
ஏதோவொன்றை பேசிக்கொண்டிருப்பாள்

அதன் தோற்றம்
தன் மனதை ஒத்ததென சொல்லி
அதனுடன் பிரியம் கொள்கிறாள்

சிதிலங்களுக்கிடையான
அதன் தனிமையை
ரசித்து ரசித்து
தன்னையும் தனிமைப்படுத்தி கொள்கிறாள்

எவரும் நுழையாத அந்த அறையில்
வாழ்கின்ற எல்லா
சிலந்தியின் கால்களிலும்
தன் ஏக்கங்களை
கட்டி தொங்கவிடுகிறாள்

அசைந்து அசைந்து
ஊர்ந்து திரியும் ஏக்கங்களை
இயலாமையுடன் உற்று நோக்குகிறாள்..

ஏக்கங்களின் கண்களுக்குள்
ஒரு சிறுமி வானத்து நிலாவை
எட்டி பிடிக்க முயற்சித்து
தோற்றுபோய் சோர்வுடன் அமர்ந்து
நிலாவை நிராசையுடன்
அண்ணாந்துப் பார்க்கிறாள்...

அவள் கைகளில்
பலவர்ண பட்டாம்பூச்சிகள்
படபடத்து கொண்டிருக்கின்றன

அச்சிறுமியையே
வெறித்து பார்த்துக்கொண்டிருந்த ரோஸி,
அந்த அறையெங்கும் நிரம்பிய
நிலவொளியை கடைசிவரை
கண்டுக்கொள்ளவேயில்லை

--- சசி சிவதாசன்

பூகோளப் பகுதியின்
புலப்படாத இடுக்கில்
சிங்கத்துக்கும்
காட்டெருமைக்குமான
ஜீவமரண போராட்டத்தில்
வாழ்வதற்காக ஒன்றும்
வாழ்வை தக்க வைக்க
மற்றொன்றும் குத்தி
கிழித்து குதற
வலியதின் பக்கம்நின்று
மிஞ்சிப்போகும்
எச்சில் துணுக்குகளுக்காக
வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன
வல்லூறுகள்

--- மதுரா

## நொடி முட்கள் நிற்பதில்லை
-----------------------------

கடிகாரங்கள் விழுங்கிய வாழ்க்கைகள்
மூச்சு விட துடிக்கும் நிமிடங்கள்
நொடிக்கு நொடி நெருங்கிய தேடலில்
உயிரிழந்தது உறவுகளின் வருடல்

இதய இடுக்குகளில் மறைந்த பாசம்
இயந்திரங்களுக்கு இரையானது
இணைப்புக்கள் இணையத்துக்குள்
இடறிவிழ அவிழ்ந்தது முடிச்சுகள்

பெற்ற பாவத்திற்கு வருடத்திற்கு
ஒருமுறை சந்திப்பு-தாலிகட்டிய பாவத்திற்கு
மாதமொருமுறை மறுபிறப்பு மறுப்பின்றி நடந்தேறியது

இலக்குகளின் இருட்டறையில்
நொடி முட்களின் இறுக்கத்தில்
ஈரமான இதயங்கள் வறண்டு
துளிர்க்கும் விதையும் ஊனமுற்றது

தேடல்களுக்குள் தொலைந்த
வாழ்க்கையின் முடிவில்
வெற்றிகள் குவிய அதை கொண்டாட
தனிமை மட்டும் துணையாய் இருக்கும்....

--- ஆய்ஷா ஷப்னி

செல்லாத ஐநூறு ஆயிரத்தில்...
சிரித்துக் கொண்டிருக்கிறது...
அஹிம்சை

--- எம்.செல்வகணேஷ்

## இரவு
-------

நினைவுகளை விழுங்கிவிட்டு
செரிக்க முடியாமல்
ஒரு மலைப்பாம்பை போல்
உழன்று நெளியும்
இவ்விரவு நெடிது...
அதன்மீது கவிழ்ந்திருக்கும்
இப்பேரமைதி அதனினும் கொடிது....

--- டயானா

இரவின் நிசப்தத்தில்
தனித்தலைகிறது கண்கள்!

நறுமணம் மிக்க மலரொன்றை
சுமந்து திரிகிறது தென்றல்!

சில்லென்ற ஜன்னலின்
மூடு பனியின் மென்தாக்குதல்கள்!

சாளரம் வழியே ஒலிக்கும் பாடலின்
மிதமிஞ்சிய இராப்பொழுதுகள்!

இக்கணத்தில் தொலைதூரத்தில்
புதுபுது அர்த்தங்கள்!

பின்பு வழமைப்போலவே,
தூக்கமில்லா இவ் இரவில்
காற்றில் மிதக்கிறது மனவிரல்கள்!

--- ஆனந்தி ராமகிருஷ்ணன்

என் உயிர் கவிதை நீ ...
ஒரே வார்த்தையில்
அழகிய கவிதை...நீ...
இரண்டு வார்த்தையில்
வாசிக்க விரும்பினால்
நாம்...
மூன்று வார்த்தையில்
மனம் நிறைத்திட, நம் காதல்..
வார்த்தைகளே இல்லா வசீகர கவிதைவேண்டினால்...
உன் கொஞ்சும் நினைவு ...
உயிர்சான்றாய் உயர்வான
என் உயிர் கவிதை ..
நீ .. இருக்க..
வெறும் வார்த்தை கவிதைகளை
குறிப்பெடுத்து நான் எதை வெல்வேன்?

--- ஆசை அஜித்

முதிர்க்கன்னிகள்..!
-----------------

நம்மிடையே சில
நம்பிக்கை அற்ற
கைகள் கால்கள்
செய்வதறியாது
முகமிழந்த
முகமூடியை
போட்டுக்கொண்டன....!

--- புதூர் ராஜ்குமார்

வரைந்து முடித்த நெல்மணிகளை
வெறித்து பார்த்தபடியே
பசியை கொறித்து கொண்டிருந்தான்
தெரு ஓவியன்

--- சுயம்பு

ஒவ்வொரு இரவும்
ஒவ்வொருவரோடு கூடிடும்
இந்த மஞ்சத்தில்
என்றேனும் ஒருநாள்
நானாக இழக்காத
கற்பை மீட்டிடும்
எனது கனவு
விடிந்த பொழுதினில்
தரகரின் பேரத்தில்
விடைபெற்றே போவதோ??

--- மீனு

திறந்துகிடக்கும்சிதறுண்டஇதயமென
சேறும் நீரும் சரிபாதியாய் கலந்து
தோற்றம்கொள்ளும்
இந்தசெங்குட்டைக்குள்

அமிழ்ந்துகிடக்கின்றன
உயிர்பயத்தில்
கெண்டைகளும்கெழுத்திகளும்

சுற்றிலும்
மொய்த்துக்கிடக்கின்றன
களிமண் வீச்சத்தோடு
மீன் கொத்திகளின் அலகுகள்
நாரைகளின் குச்சிக்கால்கள்
கொக்குகளின் வெள்ளைச் சிறகுகள்
காக்கைகளின் தந்திரங்கள்

மீன்ருசியில் எச்சில்
ஊறித்திளைக்கும் நாவுகள்
மற்றும் என்கவிதைகள்!

--- தங்கேஸ்

மண்வாசம்
-----------

ஐப்பசி வானம் பொத்துக்கிட்டு ஊத்த
ஆறு குளமெல்லாம் வெள்ளம் போக

ஆடிக்காத்துல பிஞ்ச கூர வழியா
மழை சொட்டு சொட்டா ஒழுக
சாணி மொழுகுன இடம்
சத்த நேரத்துல ஈரமாச்சு

ரசம் வைக்க
அம்மியில மிளகு சீரகம் அரைச்சு
அரிசி கழுவுன தண்ணியில
புளி ஊரவச்சு

அம்மா
ஊதி ஊதி
விறகெரிக்க
ஒரு வழியா உலை கொதிக்க

சோற ஆறவிடாம
அவசரமா அள்ளிவச்சு
உள்நாக்க சுட்டுக்கிட்டேன்
ஒருவழியா தின்னுவிட்டேன்

ஒழுகுன மழைத்தண்ணியிலே
கை கழுவி
ஒரு ஓரமா பாய்விரித்து நான் படுக்க

அடித்த மழை ஓய்ந்து
அடுத்த ஊருக்கு போகையில
ரசத்தோடு சேர்ந்து மணத்தது
என் ஊரோட மண்வாசம்

--- மு_சாத்தப்பன்

வாழ்வும் வளமும்
----------------

வியர்வை விதை தூவிய
உழவன்
நெல்லாய் விளைந்தாலும்
அவன் வீட்டு அடுப்பில்
சமைக்கப் படுகிறது
பசியும்
வறுமையும்
சேறு கிழித்து ஏர் ஈட்டி பாய்கிறது
வியர்வைக் குருதி
நிலத்தில் சிந்தி விதையாகிறது
பாத்திர வயல்களில் சோற்று மணிகள்
விளைந்தாலும்
உழவன் வீட்டுப் பாத்திர வயல்
தரிசாகத்தான் கிடக்கிறது
அதில்
விளைகிறது பசி மட்டும்

--- ஷல்மா ஷாஜஹான்

கண்ணாடித் குடுவையில்
வண்ண மீன்களை அடைத்து
கிடைக்கும் நேரம் அதற்கு
உணவு இட்டு
மீன்கள் மகிழ்ச்சியாக
நீந்துகிறது என நினைக்கும்
சில மனிதர்களின் செயல்
வேடிக்கையானது.!!

--- சு_மணிரத்தினம்

பாவங்களை நதியில்
மூழ்கிக் கரைத்துப்பின்
விடுவித்துக்கொண்டதாய்
நம்பி நினைத்து
கரையேறிச் செல்கையில்
கறைகள் மீண்டும்
பட்டு விடாதபடி
பாதுகாக்கும் திரை
மனதுக்கும் கண்ணுக்கும்
மாட்டப்படுவதில்லை!

திரும்பவும் பசைமனதில்
திட்டுத்திட்டாய்
ஒட்டிக் கொள்கின்றன
ஒட்டக்கூடாதவை!

நேரங்கிடைக்கும்போதெல்லாம்
நதியிடம் வந்தால்
மீள்தூய்மை பெறும்
மீப்பெரு நம்பிக்கையோடு
பாவங்கள் ஒட்டும்
பசையோடு மனங்கள்!

--- அகத்தின் அழகு ரெஜி

முன்னாள் நடவு நிலம்...!
-------------------------

இலையுதிர்காலக் காற்றின்
இசை பருகி மிதக்கும் இலை
காதில் கிசுகிசுக்கிறது காதலை

அம்மரத்தின் முதிர்ந்த கிளை
தன்மீதேறி விளையாடும்
நினைவுகளைச் சகிக்கிறது

மழை இல்லை கூடுகள் இல்லை
வேர்களுக்கு மட்டும் உண்டு
வெறுங்கைகள்

நிலங்களுக்கு ஏற்ற ராகம்
"பச்சையம் "
செங்குரல் உரக்க
புழுதிபாடித் திரிகிறது மண்

ஒரு காதல் ஒரு மரம்
தாகித்துக் கிடக்கின்றன
எந்திரச் சத்தம் அடங்காத
முன்னாள் நடவு நிலத்தில்..!

--- தமிழ்க்காடன்

அப்படியே கடத்துகிறாள்
அடிவயிற்று நெருப்பை
பற்ற மறுக்கிறதே அடுப்பு !

உயிர்க்காற்றையே தந்தாலும்
உண்ண மறுக்கிறது
உறங்குகின்ற நெருப்பு !

அடுப்புக்குள் ஆயிரம் குச்சிகள்
கொதிக்க மறுக்கும் உலை
பற்றவைக்காத தீக்குச்சி !

புல்லாங்குழலால் பள்ளியெழுச்சி
ஒருவேளை
இசைக்கு மட்டுமே இசையுமோ ?

--- துரை வசந்தராசன்